பாவேந்தரின்

காளமேகம்

சேகர் பதிப்பகம்

பாவேந்தரின் காளமேகம்

உவமைக் கவிஞர் சுரதா

சேகர் பதிப்பகம்

66/1, பெரியார் தெரு,
எம். ஜி. ஆர். நகர்,
சென்னை-600 078.
(போன் : 4834325)

பாவேந்தர் பாரதிதாசனார்
106ஆவது ஆண்டு பிறந்த நாள்
29-4-1997 வெளியீடு

பாவேந்தர் பாரதிதாசனார்
நினைவு அருங்காட்சியகம்
115, பெருமாள் கோயில் தெரு,
புதுச்சேரி-605 001.

விலை ரூ. 6-00

அச்சிட்டோர்:
சதுர்வேந்தன் அச்சகம்
கோடம்பாக்கம், சென்னை-24.

ஒரு பதச்சோறு!

முறையாகத் தமிழ் பயின்று தேர்ந்த முத்தமிழ் வித்தகர்களே தமிழ்த் திரைப்படங்களின் தொடக்க காலத்தில் கொடிகட்டிப் பறந்தனர். அறுபதாண்டுகளுக்கு முன் ஆற்றல் மிக்க எழுத்தாளர், சமுதாயப் பொறுப்புணர்ச்சியோடு கலையுலகில் சாதனை புரிந்துள்ளனர் பாடலாசிரியர்களோ அறுநூறு பேர் தீமையிலிருந்து கரையேறி நன்மை பெறவும், கேடுகள் அழிந்து பண்பாடு தலைநிமிர்ந்து வெற்றி பெறவும் மக்கள் பாடம் பெறத்தக்க வகையில் கதைகளைக் கண்டனர்; உரையாடல் தந்தனர்; இதயத்தை இசைய வைக்கும் பொருத்தமான நல்லிசையால் சிறு சிறு பாடல்களை எழுதி மக்களை மகிழ்வித்தனர்.

தோரணங்கள் வரிசையிட்டுத் தொங்கும் விழாப் பந்தலெனத் தமிழ்ப்படங்கள் அக்காலத்தில் வெளிவந்தன. ஒரு படத்தில் அறுபத்திரண்டு பாடல்கள்! எண்ணிக்கை குறையத் தொடங்கிய முறையிலேயே ஒரு வரலாறு பதிவாகிறது. பத்துப் பன்னிரண்டு இசைக் கருவிகளே பயன்படுத்தப் பெற்றுள்ளன

தமிழ்ப் புலவர்களில் தனியிடம் பெற்றவர் கவிஞர் காளமேகம். அவர் கதை பற்றிய தமிழ்த் திரைப்படத்திற்குத் தமிழ்ப்புலவரான பாவேந்தர் பாரதிதாசன் உரையாடல், பாடல் எழுதினார். 1940இல் உருவான காளமேகம் தமிழ்ப் படத்தில் 2 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இதிலுள்ள ஒருபாடலைக் கல்வெட்



டாக்கிப் பாவேந்தர் நினைவாகப் பதிக்கும் முயற்சியும் உருவாகியுள்ளது.

இப்படத்தில் கலையுலக வரலாற்றுச் சிறப்புகள் உள்ளதை இப்படப் பாடல் புத்தகத்தின் வாயிலாக அறியலாம்.

படத்தை இயக்கியவர், பல வெற்றித் தமிழ்ப் படங்களை உருவாக்கிய ஐரோப்பிய இயக்குநர் எல்லிஸ் ஆர். டங்கன். அகில இந்தியப் புகழ் நாதசுர வித்துவான், திருவாவடுதுறை ஆதீன வித்துவான், நாதசுர சக்கரவர்த்தி டி. என். இராஜரத்தினம் பிள்ளை அவர்கள் கவிகாளமேகமாக நடித்துள்ளார்.

துணை இயக்குநர் பி. எஸ். செட்டியார். இவரே பிற்காலத்தில் *'சினிமா உலகம்'* என்னும் முதல் சினிமா இதழைத் தொடங்கிச் சிறப்புற நடத்தியவர். சீர்காழி கோவிந்தராசன் அவர்களின் சிறிய தந்தையார். மேலும் இப்படத்தில் பணிபுரிந்த வேணுகோபால சர்மா அவர்களின் பிற்காலச் சாதனையே இன்று நாம் காணும் திருவள்ளுவர் திருஉருவப் படம்

புரட்சிக் கவிஞரின் முதல் தமிழ்த் திரைப்படம் காளமேகம். அதன் பாட்டுப் புத்தகத்தில் புதுவை பாரதிதாசன் என்று காணப்படுகிறது. ஒரு கவிஞரின் கதைக்கு மற்றொரு கவிஞர் உரையாடல், பாடல் எழுதியது சிறப்புக்குரியது தானே!

அவர் போன்றே அவர்தம் வழிவந்த உவமைக்கவிஞர் சுரதா அவர்கள் ஏழிசை மன்னர் டி.கே. தியாகராஜ பாகவதர் நடித்த அமரகவி எனும் படத்திற்கு உரையாடல், பாடல் வரைந்து புகழ் பெற்றார்.

அடுத்து வந்த கவியரசர் கண்ணதாசன் அவர்கள் அம்பிகாபதி என்னும் கவிஞனின் கதைக்கு உரையாடலும்

பாடலும் எழுதி புகழடைந்தார். பின்னர் கவிஞராகவே நடித்தும் காட்டினார்.

1940இல் உருவான காளமேகம் திரைப்படப் பாடல் புத்தகத்தை அடைகாத்து வைத்திருந்து. பாவேந்தரின் 106ஆவது ஆண்டு பிறந்தநாளில் வெளியிடுங்கள் என்று அன்புடன் தந்தார் வரலாற்றுக் களஞ்சியம், சுரதா அவர்கள். அத்துடன் கவிஞர்களின் கதைகட்கு உரையும் பாடலும் வரைந்த கவிஞர்கள், புலவர்கள் குறிப்போடு திரைப்படங்களின் பட்டியலையும் தொகுத்தளித்தார்.

'இவ்வகையில், மற்ற பல கவிஞர்கள் தொடர்புடைய கலை, திரைப்பட வரலாற்றுச் செய்திகளும் தொடர்ந்து நூலாக வெளிவர வேண்டும்' என்ற விருப்பத்தையும் தெரிவித்தார், விரிந்த நெஞ்சினராம் நம் சுரதா அவர்கள். உடல்நலமின்றி ஓய்விலிருந்தபோதிலும் தன் ஆசான் பற்றிய முதல் திரைப்படப் பாடல் புத்தகம் தக்க சமயத்தில் வெளிப்படுத்திட விரும்பி, புதையலிலிருந்து பேர்த்தெடுத்தளித்த அவரது பெருந்தகைமைக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியும் வணக்கமும் உரித்தாக்குகிறேன்.

நூலில் புரட்சிக் கவிஞரின் திரைப் பாடல்களுடன் மணிவாசகரின் பாடலும், காளமேகப் புலவரின் பாடலும் கலந்துள்ளதைக் கண்டு கொள்க.

தமிழ்மொழி நடை, கலையுலக நிலையின் போக்கு, வளர்ச்சி, சமய, சமுதாய மாற்றம் முதலியவற்றை ஆய்வோர்கட்கும் இச்சிறு நூல் ஒளிகாட்டி உதவும். பாவேந்தர் பட அனுபவம் பற்றிய ஒரு கருத்துக் கடிதமும் இதில் அடங்கியுள்ளது அரிய கலைஞர்கள் பலர் பற்றிய குறிப்புகளும் படிப்போர் சிந்தனையைக் கிளறிவிடும்.

தமிழ் ஆர்வலர்கள், கலையார்வம் மிக்கவர்கள், கவிஞர்கள் முதலியோர் திருக்கரங்களுக்குள் திகழ வேண்டிய சிறந்த நூல் இது.

—வெள்ளையாம்பட்டு சுந்தரம்

நடிகர்

அகில இந்திய நாதஸ்வர வித்வான்

டி. என். ராஜரத்னம்	— வரதன், காளமேகம்
என். எஸ். கிருஷ்ணன்	— கிட்டு
வி. வி. வி. பந்துலு	— அதிமதுரகவி
காளி என். ரத்தினம்	— கந்தப்புலவர்
எம். வி. மணி	— பூத்துப் புலவர்
எம். எஸ். முத்துக்கிருஷ்ணன்	— சிங்காரம்
எஸ். முருகேசன்	— அரசன் திருமலை ராயன்
மாஸ்டர் டி. வி. நமசிவாயம்	— இளவரசன்
ஜோக்கர் ராமுடு	— கமலக்கண்ணன்
குஞ்சிதபாதம் பிள்ளை	— குஞ்சிதப் புலவர்
கே. ஆர். வேணுகோபால சர்மா	— நாட்டுவக் கிழவன்
கே. எஸ். முத்தையா பாகவதர்	— தேவி பக்தன்
ராமாமிர்த சோழகனார்	— மணியக்காரன்

ஆர். எஸ். ராமு, நடராஜன், எம். ஏ. பிச்சைபாண்டுரார், டி. தங்கையா, எ... சிவக்கொழுந்து. வி. ஜி. நம்மாழ்வார் ரெட்டியார், ராமசாமி பிள்ளை, சுந்தரபாஷ்யம் நாயுடு மற்றும் நூற்றுக்கணக்கானவர்.

நடிகையர்

எஸ். பி. எல். தனலக்ஷ்மி	— மோகனாங்கி
டி. ஏ. மதுரம்	— அழகுசுகம்
பி. ஆர். மங்களம்	— கந்தப்புலவர் மனைவி
பி. எஸ். ஞானம்	— வீரி
டி. என். ராஜலக்ஷ்மி	— தேவி
டி. எம். பட்டம்மாள்	— நடனமாது
என். கே. பெரிய பாப்பு	— ரத்னம்
கே. சுப்புலக்ஷ்மி	— அமுதம்
ஜி. எஸ். சரஸ்வதி	— கல்யாணி
எம். ஆர். சரஸ்வதி	— பச்சை
எஸ். ஆர். மீனாட்சி, கே. டி. தனலக்ஷ்மி	— இதர தாசிகள்
சிறுமி சிட்டாணி ராஜலக்ஷ்மி	— வீரியின் வளர்ப்புப் பெண்
மனோன்மணி அம்மாள்	— மோகனாவின் தாய்

இன்னும் அனேகர்.

டைரக்ஷன்	— எல்லிஸ் ஆர். டங்கன் வில்லியம் ஜே. மாய்லன்
துணை டைரக்ஷன்	— பி. எஸ். செட்டியார் எஸ் ஜி. அய்யர்
அசிஸ்டெண்டு	— எம். ஏ. கணேசம்
கதை, வசனம், பாட்டு	— புதுவை பாரதிதாசன்
எடிட்டர்	— ஆர். எஸ். மணி
ஆர்ட் டைரக்ஷன்	— வி நமசிவாயம்
சங்கீத டைரக்ஷன்	— ஆர். என். சின்னையா
ஸ்டுடியோ	— பிராக் ஜோதி மோஷன் பிக்சர்ஸ்

பக்க வாத்தியங்கள்

ஆர். என். சின்னையா எம். வி சந்தானமையா	— ஆர்மோனியம்
வி. கோவிந்தசாமி	— பிடில்
ஆர். என். தம்பி	— வீணை
கே. வி. நாயுடு	— மிருதங்கம்
வி குப்புசாமி நாயுடு	— கிளார்னட்
சாது கணபதி சாஸ்திரி	— ஜலதரங்கம்
பந்தேகான் சாகேப்	— சாரங்கி
ஜே. ராமகிருஷ்ண ராவ்	— ஆர்கன்
நாகையா	— புல்லாங்குழல்
டி. எஸ் மணி	— புல்புல்தாரா
என். பார்த்தசாரதி நாயுடு	— சேக்ஸபோன்

ஸ்ரீ மதுரை தண்டபாணி பிலிம்ஸ் லிமிடெட்,
சேலம் மோகினி பிக்சர்ஸ் லிமிடெட்.

தயாரிப்பு.

பூரண உரிமை:—

ஸ்ரீ தண்டபாணி பிலிம்ஸ் லிமிடெட்

மதுரை.

உ

சிவமயம்

‘காளமேகம்’

கதைச் சுருக்கம்

அதிகாலை. ஸ்ரீரங்கம் பெரியகோவில். பரிசாரகு வரதன் மடப்பள்ளியில் தன் தொழிலைக் கவனிக்கிறான். அவன் தோழன் கிட்டு அங்கு வர, அவனுடன் காவிரி நோக்கிச் செல்கிறான்.

காவிரியாற்றுப் படித்துறை. அடுத்தாற்போல் தோப்பு. திருவானைக்கா சிவன்கோயில் தாசி மோகனாங்கியும், அவள் தங்கை அஞ்சுகமும், வீரி, ரத்னம், பச்சை, அமுதம், கல்யாணி முதலிய இதர தாசிகளும் நீராடுகிறார்கள். பெண்களின் வம்புப் பேச்சு. பொறாமைக்காரி வீரி கோபத்தோடு வீடு திரும்புகிறாள்.

வரதன், கிட்டுவோடு தோப்பிலிருந்து பாடுகிறான். அந்த இசை அமுதத்திலே தன் உள்ளத்தைப் பறிகொடுக்கிறாள் மோகனாங்கி. வரதன் படித்துறை நோக்கி வருகிறான். அவனைப் பார்த்தவண்ணம் படியேறிய மோகனா, கால் தவறி ஆற்றில் விழுகிறாள். வரதன் ஆற்றில் குதித்து அவளைக் கரை சேர்க்கிறான். காதல் பார்வைகள்; கனிவு மொழிகள்.

திருவானைக்கா வீதியுலா. சுவாமி பவனி வருகிறது. மோகனாங்கியின் பரத நாட்டியம். வரதனும், கிட்டுவும் அங்கு வந்து, மோகனாவின் நாட்டியத்தை ரசிக்கிறார்

கள். காதலர் கண்கள் சந்திக்கின்றன. வரதன், கிட்டு நிற்குமிடம் அஞ்சுகம் வருகிறாள்; இருப்பிடம் கூறு கிறாள்; நாளை வருவதாக வரதன் சொல்கிறான்

அடுத்த நாள் வரதனும், மோகனாவும் சந்திக்கின்றனர். காதல் மலர்கிறது. கிட்டு, அஞ்சுகத்தைக் காதலிக்கிறான் மோகனாமீது பொறாமை கொண்ட வீரி, மற்ற தாசிகளையும் சேர்த்துக்கொண்டு, அஞ்சுகத்தைச் சண்டைக்கிழுக்கிறாள்; மோசனாவை மானபங்கப்படுத்தத் தீர்மானிக்கிறாள்.

திருவானைக்காவில் மார்கழித் திருநாள்; தாசிகள் திருவெம்பாவை பாடுகிறார்கள்; வீரி, 'உங்கையிற் பிள்ளை' என்ற பாட்டை ஆரப்பிக்கிறாள்; மோகனாவும், மற்றவர்களும் அதைப் பின்பற்றுகிறார்கள். அந்தப் பாட்டில் வரும் 'எம்கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க' என்ற அடியை மோகனா சொல்லும் போது, அனைவரும் சிரிக்கிறார்கள். மோகனா அவமதிக்கப்படுகிறாள்.

அன்றிரவு மோகனா வீட்டுக்கு வரதன் வருகிறான். கதவு தாளிட்டிருக்கிறது. வரதன், ஆச்சரியத்தோடு கதவைத் தட்டுகிறான். மிகுந்த துக்கத்தோடு மோகனா சொல்கிறாள், 'இனி, நான் சைவரல்லாதவரைத் தீண்டுவதில்லை' என்று.

'மதமா? காதலா?' வரதன் திகைக்கிறான்; பித்துப் பிடித்தவன்போல் போகிறான். அவன் மனம் மாறுகிறது. 'எம்மதமும் சம்மதம்'. சைவனாகிவிட நிச்சயிக்கிறான்.

இதற்கிடையில் அந்தப் பொறாமைக்காரி வீரி, மோகனாவுக்கு விபசார தோஷம் கற்பிக்க முயலுகிறாள். சிங்காரம் என்ற பேதை வாலிபனைச் சிங்காரித்து, மோகனா வீட்டுக்கு அனுப்புகிறாள்; அது வீரிக்கே அவமானமாக முடிகிறது.

வரதனை நினைந்து வாடுகிறாள் மோகனா. வரதன் சைவனான செய்தி எட்டுகிறது. வரதனுக்குக் குதூகல மான வரவேற்பு. கிட்டுவும் சைவனாகிறான். வரதன் திருவானைக்கா கோயில் மடப்பள்ளியில் பரிசாரகனாகச் சேர்க்கப்படுகிறான்.

தேவியின் அருளால் கவித்துவம் பெற விரும்புகிறான் ஒரு பக்தன்; கோவிலின் ஒரு புறத்தே அம்பிகையின் அருள் வேண்டி நிஷ்டையி லிருக்கிறான். கோயில் கிணற்றடியில் மோகனாவை வரதன் சந்தித்து, இரவு வீட்டுக்குப் போகும்போது இருவரும் சேர்ந்து செல்லலாம் என்று சொல்கிறான். கோயில் காரியங்கள் முடிந்த பிறகு, மோகனா, வரதனைத் தேடுகிறாள்; அவனைக் காணாமையால் வீடு திரும்புகிறாள். கோயில் கதவு சாத் தப்படுகிறது. பக்தன் மட்டும் ஒரு பக்கம் மந்திரம் ஜபித் துக் கொண்டிருக்கிறான். வரதனும், மோகனாவுக்காக ஒரு பக்கத்தில் காத்திருக்கிறான்.

பக்தன் முன் தேவி அழகிய பெண்ணாகக் காட்சி அளிக்கிறாள்; அவன் அருகில் சென்று வாயைத் திறக்கச் சொல்கிறாள். தேவியைத் தாசி என்று நினைத்து, விரட்டு கிறான் பக்தன். அதிர்ஷ்ட ஹீனன்!

பிறகு, வரதனிடம் தேவி வருகிறாள். அவன், தேவியை மோகனா என்று நினைத்து வரவேற்கிறான்; அவள் கட்டளைப்படி வாயைத் திறக்கிறான். அம்பிகை, அவன் நாவில் 'ஓம்' என்று சுழி வாங்குகிறாள். அதிர்ஷ்ட சாலி! 'காளமேகம்போல கவி பொழிக' என்று வரதனை ஆசீர்வதித்துத் தேவி மறைகிறாள்.

காலை மலர்கிறது; கபாடம் திறக்கின்றனர்; கடல் மடை திறந்தாற்போல் கவி பொழிகிறார் காளமேகம். அம்பிகையின் அருள் விளையாட்டு ஊரெங்கும் பரவு

கிறது. மோகனா மனம் பூரிக்கிறாள். வீரி முதலியோர் மோகனாவிடம் மன்னிப்புக் கோருகின்றனர்

திருமலைராயன்பட்டினம்; அரசன் கொலுவிருக்கிறான். அவனது ஆஸ்தான வித்வான், அதிமதுரகவி மிகக் கொடியவன்; தன் பரிவாரங்களோடு அவனும் வீற்றிருக்கிறான்.

ஓர் உத்தமக் கவிஞரான முத்துப் புலவர் பரிசு பெற வருகிறார் அதிமதுர கவிக்கும், அவருக்கும் சபையில் கவி சம்பந்தமாக வாக்குவாதம் நடக்கிறது. நியாயமற்ற முறையிலே அதிமதுர கவியால் அவமானப்படுத்தப்படுகிறார் முத்துப் புலவர். அதிமதுரத்தின் சொற்படி அரசனும் நடக்கிறான்.

காளமேகமும், மோகனாங்கியும் உல்லாசமாக இருக்கின்றனர். முத்துப் புலவர் வந்து காளமேகத்தின் பாதத்தில் வீழ்கிறார்; அதிமதுர கவியின் ஆணவத்தை அடக்குமாறு வேண்டுகிறார் மோகனாவிடம் விடை பெற்று இருவரும் திருமலைராயன்பட்டினம் போகின்றனர்.

திருமலைராயன் நகர். அதிமதுரகவி ஆர்ப்பாட்டமாக பவனி வருகிறான். அவனது அறுபத்திநான்கு தண்டிகைப் புலவர்களும் பின் தொடர்கின்றனர். கட்டியக்காரன் கட்டியங் கூறுகிறான். அனைவரும் 'பராக்' சொல்கின்றனர். காளமேகமும், முத்துப் புலவரும் எதிர்ப்படுகின்றனர். அவர்கள் பராக் சொல்லவில்லை. கட்டியக்காரன் சொல்லும்படி வற்புறுத்துகிறான்.

காளமேகம், அதிமதுரகவியைக் கேலியாகப் பாடுகிறார். அதையறிந்த அதிமதுரம் கோபமாகச் செல்கிறான்; அவர் யார் என்பதை வேவு மூலம் அறிகிறான்; காளமேகத்தை மானபங்கம் செய்யத் தீர்மானிக்கிறான்;

அரசனிடம் காளமேகத்தைப் பற்றிக் கோள் சொல்கிறான். அவன் சூழ்ச்சியில் அரசனும் வீழ்கிறான்.

ராஜ சபை கூடியிருக்கிறது. காளமேகம் வருகிறார். அவருக்கு ஒரு மரியாதையும் செய்யவில்லை; ஆசனமும் அளிக்கவில்லை. காளமேகம் சகலகலாவல்லியை மனம் உசிந்து வேண்டுகிறார். அரசனது சிம்மாசனம் வளர்ந்து இடந்தருகிறது. காளமேகம் கம்பீரமாக அதில் அமர்கிறார.

அதிமதுரத்திற்கும், காளமேகத்திற்கும் வாக்குவாதம். இருவரும் தத்தம் கவிதா சக்தியைக் காட்டுகின்றனர். படித்த விவாதம்

'உமக்கு அரிகண்டம் பாடத் தெரியுமா?'-அதிமதுரம்.

'உமக்கு யமகண்டம் பாடத் தெரியுமா?'—காளமேகம்.

கடைசியாக, அந்தப் பயங்கரமான யமகண்டம் பாடத் தாமே முன்வருகிறார் காளமேகம்.

மறுநாள். திறந்த வெளி. ஆழமும், அகலமும் உள்ள நெருப்புக் குழி. அதன் நடுவில் பெரிய எண்ணெய்க் கொப்பறை. அதன்மேல் கட்டித்தொங்கும் உறியில் காளமேகம் இருக்கிறார். ஈட்டிகள் புனைத்த சங்கிலி யானையின் துதிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

யார் எவ்வித சமிக்ஞை கூறினும் உடனுக்குடன் பாட வேண்டும். இல்லையேல், யானை இழுக்க, ஈட்டிகளால் குத்தப்பட்டுக் கொப்பறையில் வீழ்ந்து மாள வேண்டும். இதுவே, அந்தக் கொடிய பயங்கரமான எமகண்டம்

அரசன், பிரதானியா, புலவர், பொதுமக்கள் சூழ்ந்திருக்கின்றனர். அதிமதுரகவி உள்ளிட்ட புலவர்கள் சமிக்ஞை கொடுக்கின்றனர். அத்தனைக்கும் வெகு

பொருத்தமாகக் கவி பாடுகிறார் காளமேகம். பொது மக்கள் பாராட்டு.

அதிமதுரம் ஆச்சரியம். எனினும், அவனது பொறாமைத் தீ கொழுந்துவிட்டு எரிகிறது. உரியினின்றும் காளமேகம் இறக்கப்படுகிறார்.

'தெரியும் இந்த ஜாலவித்தையெல்லாம்; மரியாதையாக உம் ஊர் போய்ச் சேரும்' என்று விரட்டுகிறான் அதிமதுரம். அதை அரசனும் ஆமோதிக்கிறான். பொது மக்கள் ஆத்திரம். முத்துப்புலவர் மனம் பற்றி எரிகிறது. காளமேகம் மனம் புண்படுகிறது; திருமலைராயன் நகர் மண்மாரி பெய்யப் பாடுகிறார்.

வானம் குமுறுகிறது; கட்டடங்கள் அதிர்கின்றன; மரங்கள் சாய்கின்றன; அரசன் நடுக்கம்; அதிமதுரம் ஓடுகிறான்.........

அதிமதுரத்தின் கதி என்ன? திருமலைராயன் நகர் எவ்வாறாகிறது? காளமேகம் என்ன செய்கிறார்? திடுக்கிடச் செய்யும் மற்ற சம்பவங்களைத் திரையில் காணுங்கள்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

உ

சிவமயம்

'காளமேகம்'

பாட்டுகள்

வரதன் தோப்பில்

இராகம்:- சுத்தசாவேரி　　　　　　　　தாளம்:- சாப்பு

வான ஜோதி!　　சூர்ய தேவா!
வா! வாழ்வின் உணர்வே அமுதே நீல　　(வான)
ஞான நாதா　　ஆதி தேவா
நாடும் உயிரே　　ஒளியே நீல　　(வான)

இராகம்:- இந்துஸ்தான் காபி　　　　　　　　தாளம்:- ஆதி

மோகனா வீட்டில்.

தக தக தேஜோன் மய தேகன்
த்யாகன் கவிதா மோகன்
மாரன் தீரன் தமிழ் யூகன்
தழுவிட இனிதாம் அழகிய இரு தோள்
சகமதில் அரிதாய் இலங்கிய குணவான்
தருசுகமதை நான்
அடையப் படுமோ　　(பூலோக)

வரதன் மடைப்பள்ளியில்.

பூலோகமெலாம் அவள் ரூபம்
புதிதாகிய சோபித தீபம்

முகமா நிலவா காணேனே
முழங்காதென் மணிமொழி தானே மானே
நகை சிந்துகிறாள் என்னை மாய்க்க
மதுரித மலராம்—மதனது கணை தான்
வதை புரிந்திடுதே - மனது நைந்திடுதே
சமயமும் வருமோ
தழுவிக் கொளவே (பூலோக)

மோகனா நடனமாடும்போது.

இராகம்:- காம்போதி தாளம்:- மிஸ்ரம்

எனதாசைக் குகந்தவன் இவன்தான்டி—சகி
தினம் வீதி வருவான்டி திரும்பி எனைப் பார்ப்பான்டி
கனமையல் விளைத்தென்னைக் கண் ஜாடைசெய்வான்டி

பச்சைமாமலை போல்- வர்ணமெட்டு.

இராகம்:- காம்போதி தாளம்:- மிஸ்ரம்

வருவதாய் உரைத்துச் சென்ற
மலைமகள் குமாரன் வேலன்
வருகிறான் சகி கேள் அவனோன்
மலரடிச் சதங்கை ஓசை
முருகவேள் நேர் நின்றாலோ
மூணுமே நாணம் தோழி
தரும் சுகம் தனை நினைந்தால்
சன்ம சாபல்ய மாமே (வருவதாய்)

இராகம்:- ஸஹானா தாளம்:- திரிபுடை

கையில் பணமில்லாமல் கலவி செய்ய வந்தீரோ (கையில்)
கடனானால் எழுந்திரும் ஸ்வாமி
ஐயனே தென் பழநி அருமைக்குமரேசனே
அம்மான் மகளானாலும் சும்மா வருவாளோ (கையில்)

இராகம்:- பியாக் தாளம்—ஆதி

பாடுரேன் நானே — பாடுரேன் நானே
பாட்டு பாடுரேன் நானே

அடி தேனே ஹா-ஹா-ஹா- அஞ்சுகம்
வேலையில்லாமல் தானே.........

சுதி-சுர-லயம் இல்லாமல்தானே
சுத்தமாய்ப் பாடுரேன் கேளடி தேனே

தாம்பூரா தனிலே டொய்-டொய்-டொய்
தாளமும் கையிலே சொய்-சொய்-சொய்

வீணை தன்னிலே நிதானமாகவே சல்-வி-வி-வி
கொட்டுவரிசையைக் கேட்டுக்கோ — அதைக்
கற்றுக்கொண்ட விதம் பார்த்துக்கோ

சத்தமில்லாமலே மத்தாளம் தன்னிலே
கைத்தாளத்துடனே தக்கிட தக தரிகிட......
தக தளாங்

இராகம்:- பூபாளம் தாளம்:- மிஸ்ரம்

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கல மென்று
அங்கப் பழம் சொற் புதுக்கும் எம் அச்சத்தால்

எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம் கேள்
எம் கொங்கை நின்னன்பர் அல்லார் தோள் சேரற்க

எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எங்கண் மற்றொன்றும் காணற்க

இங்கிப்பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழி லென்ஞாயி றெமக்கேலோர் எம்பாவாய்

மோகனா — தேவிமுன்.

இராகம்:- இந்துஸ்தான் தோடி   தாளம்:- சாப்பு

தாயே அருள்வாய் அருள்வாய் அருள்வாய்
யார்துணை சொல் நீயே

தூயன் அருமை கொள்துரை என்மீது
நேயம் உறவே செய்யாயோ

மதமெனும் தடையால்
மாதென்னை நீக்க மந்தகாசனை விடாதே (தாயே)

வீசி.

இராகம்:- அமீர்கல்யாணி   தாளம்:- சாப்பு

பத்தினித்தனம் புரிஞ்சி போச்சி
பட்டப்பகல்போல் போடி-போடி-போடி
இத்தனை தினங்கள் மறைத்து வைத்தாய்
உனது நடத்தையை மூடி-மூடி-மூடி
மெத்த விபசாரியடி
மேலுக்குச் சமுசாரியடி (பத்தினி)

வரதன் மதம் மாறுதல்.

இராகம்:- கரகப் பிரியா

தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால்
இரண்டருவி பாயும் திருமலைமே லெந்தைக்கு
இரண்டுருவு மொன்றா யிசைந்து.

தாசிகள் சோபனப் பாடல்.

இராகம்:- பீம்பளாஸ் தாளம்:- சாப்பு

இருகாதலர் சீர் சொல்லி ஆடுவமே—பூங்
காவனக் குயில்போல் பாடுவமே
சீதநன் மாலைகள் சூடுவமே—நாம்
தீவிரமாய் ஒன்று கூடுவமே

இரு பார்வையும் நேர் சந்திப்பாகுதடி—மனப்
பான்மையில் தேன் சிந்திப் போகுதடி
நேரிட்ட காதல் ப்ரவாகத்திலே—இவர்
நீந்துகின்றார்கள் உற்சாகத்திலே—திவ்ய

காதலர் கோயில் விலாசமடி—நல்ல
கனியிதழ் தனில் மந்த காசமடி
ஓதற்கரிய திவர் நேசமடி—இவர்
உள்ளம் வெளியினிற் ப்ரகாசமடி (இரு காதலர்)

தேவி பக்தன்.

இராகம்:- கௌரிமனோகரி தாளம்:- ஆதி

எளியேனையாள் உலக நாயகி
ஒளிமேனி காட்டி அருள் செய்குவாய்
துளி ஞானமும் அறுகா என்னைத்
தெளிவே யடையச் செய்குவாய் அன்னை
கமழ் தாமரைப் பதம் காட்டுவாய்
கலையாகிய பால் ஊட்டுவாய்
அமுதானசெந் தமிழ் ஞானமே
அடைவித்தல்உன் கடன்தானமே

கருணாகரி எனை ஆதரி
கதி வேறில்லை ஸ்ரீ பராபரி

சரணாலயம் என் பாக்கியம்
தாயன்றி சேய்க் குண்டோ போக்கிடம்
(எளியேனை)

காளமேகம்.

இராகம்:- நாதநாமக்கிரியை தாளம்:- ஆதி

என்ன உதாரம் தேவி
எனக்கருள் செய்தாய் இந்த நேரம்
சின்ன மதியில் ஒளியைச் சேர்த்தாய்
செந்தமிழ்க் கவி ஆகச் செய்தாய்

சேய்க்கும் தாய்க்கும் உள்ள சொந்தம்
தெரிய உன் பாதார விந்தம்
சேவை செய்யும் வண்ணம் செய்தாய்
பாக்கியனானேன் உன் கிருபைக்கே
பாத்தியனானேன் க்ருதார்த்தனானேன் (என்ன)

இராகம்:- கல்யாணி

முத்தேவி மார்க்கும் முதற்தேவி ஞாலத்து
மூலத் தேவி
அத்தேவி நான்கொண்ட ஆவலுக்கும் தமிழ்
அன்பினுக்கும்
ஒத்தே விரைந்து வந்தே என்றன் நாவில்
உயிரெழுத்தை
வைத்தே விரைந்து கவி பாடுகென்று
மறைந்தனளே.

இராகம்:- இந்தோளம்

வட்டங் கொடுத்த நிலவோ எனத்தக்க
மாமுகத்தாள்
சட்டங் கொடுத்தும் புவியாவும் ஆண்டிடும்
சக்கரத்தாள்
இட்டங் கொடுத்தும் எலாங் கொடுத்துங்
காளமேகமெனும்
பட்டங் கொடுத்து நடந்தாள் பெரிய
பதம் கொடுத்தே.

சூரியனைப் பார்த்து.

இராகம்:- தோடி

நாணுகின்றேன் என்று தன்முகங் காட்டிடும்
நங்கையைப்போல்
பேணுகின்றேனென் றலைமீ துதிக்கின்ற
பேரொளியில்
பூணுகின்றேனென்று பொன்னாடை பெற்றனள்
பூ மடந்தை
காணுகின்றேன் அதில் என்னன்னை
முக்கணிற்கண் ஒன்றையே.

காளமேகம்.

இராகம்:- கனடா தாளம்:- ஆதி

கொஞ்சும் கிளிகள் பார் கீதங்கள் கேள்
கோதை லோசனா நீ
வஞ்சமாகிய பூலோக வாழ்வில்
நல்வாழ்வு காதல் வாழ்வன்றோ
தங்கிய இன்ப உலகில்
சஞ்சரிக்க நீ வாடி
பொங்குதேயடி ஆனந்தம்
பூங்காவனக் குயிலே மயிலே (கொஞ்சும்)

காளமேகம்

விருத்தம்

இராகம்:- ஷண்முகப்பிரியா

உனைப்பற்றிய கவி நீயே உனக்குப்பின் ஊரிலுள்ளோர்
நினைப்பதற்குள்ள அடையாளங்கேள் இந்த நீணிலத்தில்
இனிப்புற்ற தேன் அமுதம் தமிழ் சோலை யெழில் நிலவுர்
தனிப்பட்ட உன்னிதழ் போலவே சிவந்திடும் தாமரையே.

இளவரசன்

இராகம்:- சங்கராபரணம் தாளம்:- ஆதி

சுகித்திட வாராயோ சொல்லாய்த் தமிழ் வல்லி
சகம்நீ இன்பம்நீ சர்வமும் நீயடி
அகலாத உயிர்க் கானந்த தேகி
மாவீரமே வா கவிதா வனிதையே
இசை பெருகிடு மொழியே வா
எனுயிரின் ஒளியே உயர்வே
உனையலால் கதியிலை
அழகே மாதமிழர் ஆக்கமே மானிடர்
அறிவாம் உலகத்தின் ஆதிக்கமே நீ.

விருத்தம்

இராகம்:- சங்கராபரணம்

சீருள்ள வெண்குடை நற்றிருமலை
ராஜசிங்க யேறே
பேருள்ள உன் குடி நற்பிரதானியர்
உற்ற பெரிய சேனை
ஊருள்ள மாமக்கள் மற்றுநீ உனது
மனைமக்கள் யாரும்
பாருள்ள காலமும் பன்னலமும்
உற்றின்ப முற்று வாழி.

இராகம்:- சிம்ஹேந்திரமத்திமம்

கழியுந் தியகடல் உப்பென்று நன்னூற்
 கடலின்மொண்டு
வழியும் பொதிய வரையினிற் கால்வைத்து
 வண்கவிதை
மொழியும் புலவர் மனத்தே இடித்து
 முழங்கிமின்னிப்
பொழியும் படிக்குக் கவி காளமேகம்
 புறப்பட்டதே.

இராகம்:- கானடா

மெச்சுபுகழ் வேங்கடவா வெண்பாவிற் பாதியிலென்
இச்சையிலுன் சன்ம மெடுக்கவா மச்சாகூர்
மாகோலா சிங்காவா மாராமா ராமாரா
மாகோபா லாமாவா வா.

இராகம்:- காம்போதி

வாரணங்க ளெட்டும் மகமேரு வுங்கடலும்
தாரணியு மெல்லாஞ் சலித்தனவால் நாரணனைப்
பண்வா யிடைச்சி பருமத்தி னாலடித்த
புண்வாயி லீமொய்த்த போது.

இராகம்:- புன்னாகவராளி

தஞ்சிருக்கும் தோலுரிக்கும் நாதர்முடிமே லிருக்கும்
வெஞ்சினத்திற் பற்பட்டால் மீளாது விஞ்சுமலர்த்
தேம்பாயுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்பாகும் வாழைப் பழம்.

இராகம்:- பிலஹரி

சென்றலரை வென்ற திருமலை ராயன்கரத்தில்
வெற்றிபுரி யும்வாளே வீரவாள்—மற்றையவாள்
போவாள் வருவாள் புகுவாள புறப்படுவாள்
ஆவாளி வாளவா ளாம்.

இராகம்:- இந்துஸ்தான் காபி தாளம்:. சாப்பு

மோகனா

நாதா ப்ரியமான நாதா நாதா
குரலோ வீணை சொல்லோ கனிதான் அன்றோ
கோபமோ மாமதன் ரூபம் வருக இனிமேல்
தாளேனே
என் கண்ணாளனே
நங்கை உடல் தீயுதே தாமதமே
தகாது ப்ரியமான (நாதா)

மோகனா

இராகம்:- இந்துஸ்தான் கானடா தாளம்:- ஆதி

வாழ்க்கை உடம்பினில் காதலே ஜீவன்
மலரினில் நறுந்தேன் வீணையில் நாதம்
தேக்கிய அமுதில் சுவையின் சேர்க்கை
தென்றலின் குளிர்ச்சி காதலே அன்றோ
யாவுமே அதனால் (காத)

காளமேகம்

காதலென்றே முழங்கே நீ முரசே—ஆவி
மேவும் ஆண் பெண் காதலினாலே
விளைந்திடும் ப்ராணன் இலையெனில் மேலே
வினைதான் ஏது விளைவுகள் ஏது
விற்பனா சக்தியும் காதலின் சாயை
யாவுமே அதனால் (காத)

தமிழ்த் திரைப்படங்கள் - ஒரு பார்வை

1940

இவ்வருடத்தில் 36* படங்கள் தயாராகின.

அபலை பக்தசேதா, பக்தி, புத்திமான் பலவான், பூலோகரம்பை, பக்தகோராகும்பர், கெட்ட நாணயம், பால்ய விவாகம், சந்திரகுப்த சாணக்கியர், தானசூர கர்ணா, தேசபக்தி, டாக்டர் பங்காரு, ஹரிஹரமாயா, கிருஷ்ணன் தூது, காளமேகம், மணிமேகலை, மகாத்மா காந்தி, மீனாட்சி கல்யாணம், மீனாட்சி தேவி, நவீன விக்கிரமாதித்தன், ஊர்வசி, பரசுராமர், போலிப் பாஞ்சாலி, ராஜலோகம், சதிமகானந்தா, சதி முரளி, சியாமசுந்தர், சகுந்தலை, ஷைலக் திருமங்கை ஆழ்வார், சூர்யபுத்திரி, திலோத்தமை, உத்தமபுத்திரன், வாயாடி, விக்கிரம ஊர்வசி ஆகியவைகள்

இவற்றில் சகுந்தலை, உத்தமபுத்திரன், காளமேகம், மணிமேகலை, ஆகிய படங்கள் வெற்றிப் படங்கள்.

இவ்வருடம் எஸ். டி. சுப்புலட்சுமி, டி. என். ராஜரெத்தினம் (நாதஸ்வர வித்வான்,) டி. எஸ். துரைராஜ், டி. ஆர். ராமச்சந்திரன் ஆகியவர்கள் அறிமுகமானார்கள்.

உத்தம புத்திரனில் பி. யூ சின்னப்பாவின் இரட்டை வேட நடிப்பை அனைவரும் பாராட்டினார்கள்.

கன்னட நடிகை எம். வி. ராஜம்மா, ஆந்திர நடிகை பி. கண்ணாம்பா ஆகிய நடிகைகள் அறிமுகமானார்கள்.

O

---

* 35 படங்களின் பெயர்கள் மட்டுமே உள்ளன.

	படங்கள்	பாடல் ஆசிரியர்	பாடல்கள்	ஆண்டு
1.	நல்லதங்காள்	பரமக்குடி வித்துவான் சிவராமலிங்கம் பிள்ளை	62	1935
2.	கிருஷ்ண அர்ஜுனா	கே. வி. சந்தான கிருஷ்ண நாயுடு	61	1936
3.	பாமாவிஜயம்	கே. வி. சந்தான கிருஷ்ண நாயுடு	59	1934
4.	ஞான சௌந்தரி	உடுமலை நாராயண கவி	57	1935
5.	துருவன்	பரமக்குடி வித்துவான் சிவராமலிங்கம் பிள்ளை	56	1935
6.	கிருஷ்ணலீலா	டி. வி. நடராஜ ஆச்சாரி	55	1934
7.	ஹரிச்சந்திரா	டி. வி. நடராஜ ஆச்சாரி	52	1935
8.	துருவா	பரமக்குடி சிவராமலிங்கம்பிள்ளை	51	1935
9.	பவளக்கொடி	பாபநாசம் சிவன்	50	1934
10.	ஔவையார் (ஜெமினி)	(கவிஞர் பலர்)	48	1953

11.	அதிரூப அமராவதி	எஸ் எஸ் சங்கரலிங்கக் கவிராயர்	45	1935
12.	பூர்ண சந்திரன்	சி. ஏ. லட்சுமணதாஸ்	44	1935
13.	சுபத்திரா பரிணயம்	டி. கே. சுந்தர வாத்தியார்	42	1935
14.	நவீன சாரங்கதரா	பாபநாசம் சிவன்	41	1936
15.	சந்திரஹாசன்	மதுர பாஸ்கரதாஸ்	40	1936
16.	லவ—குச	ஹரிகேசநல்லூர் முத்தையா பாகவதர்	39	1934
17.	லீலாவதி சுலோசனா	திண்டுக்கல் சுப்பராய பிள்ளை	38	1936
18.	பாதுகாபட்டாபிஷேகம்	கே. வி. சந்தான கிருஷ்ண நாயுடு	37	1936
19.	கிருஷ்ண துலாபாரம்	டி. எம். வேதமாணிக்கம்	36	1937
20.	குசேலா	பாபநாசம் சிவன்	33	1 36
21.	தர்மபத்தினி	சி. ஏ. லட்சுமணதாஸ்	30	1936
22.	காளமேகம்	ஆசுகவி காளமேகம் புதுவை பாரதிதாசன்	29	1940

பாவேந்தரின் கடிதம்

'ஜனநாயகம்' ஆசிரியர், தோழர் திருமலை சாமியும், தோழர் எஸ். வி. லிங்கமும் என்னை ஒன்றில் கட்டுப்படுத்த உரிமையுடையவர்கள். மேலும் அவர்கள் 'ஈரோடு ஷண்முகா நந்தா டாக்கி' கம் பெனியாருக்கும் நண்பர்கள். நான் 'பாலாமணிக்குப்' பாட்டு எழுத வேண்டும் என்பது அவர்களின் விருப் பம். டாக்கீகாரர்கள் அதற்கு ஒப்புக்கொண்டார்கள்.

ஈரோடு சென்றேன். 'பாலாமணிக்'குடையவர் கதா சந்தர்ப்பங்களைச் சொல்லிப் பாட்டுக்கள் மாத்திரம் எழுதக் கட்டளையிட்டார்கள். என் வாலை அவிழ்க்கச் சந்தர்ப்பமே இல்லை. அவ்வாறே பாட்டுக்கள் மாத்திரம் எழுதிக் கொடுத்தேன்.

நான் வீடு திரும்பும்போது, 'பாலாமணி'யுடைய வரை நோக்கி, பிரதானமாகக் கேட்ட வரம் ஒன்றே ஒன்று.

அண்ணா சம்பிரதாயப்படி 'பாலாமணி'ப் பாடல் களைப் புத்தகமாக நீங்கள் அச்சடிக்கும்போது அதில் பிழையில்லாதிருக்க—என்னையும் கலந்து கொள்ளுங் கள்.

அவ்வாறே வரம் கிடைத்தது. பிறகு பாலாமணி வெளிவந்தது. எனக்குக் கொடுத்த வரத்தை உடனே உறிஞ்சிக் கொண்டார்களாதலால் லக்ஷணத்தின் எதிர் முனையில் பாட்டுப் புத்தகம் ஜொலித்துக் கொண்டிருந்தது.

அது மாத்திரமல்ல. நான் எழுதிய பாடல்கள் சில நீக்கப்பட்டும், வேறு பாடல்கள் சில சேர்க்கப்

பட்டும் இருப்பதைப் பார்த்தேன். அதுபற்றி ஒன்றுமில்லை. இன்னின்ன பாடல்கள் இன்னின்னா ரால் எழுதியவை என்பதைக் குறிக்க வேண்டியது அவசியமல்லவா? அப்படிச் செய்யாமல் வேறொருவர் எழுதிய பாடல்களுக்கு, இடப்பக்கமாக * இக்குறி வைத்ததோடு நின்றார்கள். மேலும் அப்புத்தகத்தில் அச்சுப்பிழையில்லாத இடம் அருமையாகி விட்டது. முதலாளிகட்கு இதில் கவலையிருக்க வேண்டியது அநாவசியமாகத் தோன்றலாம். இருந்தாலும் அவர் களின் இச்சட்டம் அக்கரமமானதும் நாணயமற்றது மாகும்.

நான் விழுப்புரத்தில் 'பாலாமணி' பார்க்கப் போனேன். அங்குத் தோழர் மிக் சேட் அவர்களைக் கண்டேன். இப்படிச் செய்ததற்கு என்ன காரணம் என்று கேட்டேன். அவர் கம்பெனியின் சார்பாகச் சொல்லிய பதில்கள் ரசமானவை.

பாலாமணிக்குடையவர்கள் விரும்பியபடி நான் கோரஸமாக எழுதிய பாடல் இது :

ஸ்ரீ பாரத தேவி! புராதனியே!
எழில் அன்னை நல் வீராவேசம் தீராக் காதல்
மேவச் செய்தாய் என்னை! உதாரி ஜெயசீலி!
காவேரி கங்கா தீர நாரீப்ரபல ஹிமய கிரி
தேஹி கோடானு கோடிப் போர்வீரர் தங்கள்
புனித வளமுடைய நிலத்தலைவி! முதல்வியே!
அமுதுபோல் கவிதைகள் ஆர்ந்த சாந்தமுகி
வாழி!

இதை நீக்கி— 'கார்குகா ஷண்முகா' என்று

தொடங்கும் ஓர் பாட்டைச் சேர்த்ததற்கு என்ன காரணம் என்றேன்.

'ஷண்முகாநந்தா டாக்கி' என்று கம்பெனிக்குப் பேர் வைத்திருப்பதால் கோரஸிலும் ஷண்முகம் என்று வரவேண்டுமாம். காப்பாற்று குகா என்ற பொருளில், கா குகா என்று எழுதாமல் கார்குகா என்று எழுதுவதும், பாடச் செய்வதும் பிழை யல்லவா? காரால் பிழை மொழியால் துவக்குவது தானா மங்களகரம்? சரி போகட்டும்.

வேதவல்லியை நோக்கி, சச்சிதானந்தன் பாடும் 'மதுரித மொழியுடையாய் ஒரு வார்த்தை சொல்வாய்' என்று தொடங்கும் என் பாட்டை நீக்கியதற்குக் காரணம் கேட்டேன்.

சச்சிதானந்தனாக நடிக்கும் ஸ்ரீ கருணாலய பாகவதர் அந்தப் பாட்டை வெகு இனிமையாகப் பாடி விடுவாராம். அதனால் வேதவல்லி நடிகைக்குக் குறைவு ஏற்பட்டு விடுமாம்.

முதலாளிக்கு வேண்டிய பேர்வழியைவிட வேறு பேர்வழி அழகாய் இருந்துவிட்டால், அந்த அழகனின் மூக்கை முதலாளி வெட்டி விடலாம் என்று ஓர் சட்டம் உண்டாகாமல் இருப்பது பற்றி வருத்தப்படாதிருக்க முடியுமா?

—பாரதிதாசன்

இதழ் : சினிமா உலகம்

19-9-1937